# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 14 சனிக்கிழமை 30.08.2025 கதிர் 293


## இது ரகசியம் அல்ல!

விக்கிலீக்ஸ், ஜூலியன் அசாஞ்சே பற்றி அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். அமெரிக்காவின் அரச இணையத் தளங்களுக்குள் ஊடுருவி ☞ 2

## ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவாறு செம்மணியில் எலும்புக்கூடுகள் நேற்று மீட்பு






செம்மணி மனிதப் புதைகுழியில் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவாறு இரு எலும்பு கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

ஒரு பெரிய எலும்பு கூட்டின்நெஞ்சுபகுதியுடன், ஒப்பீட்டளவில் சிறிய எலும்பு ☞ 3

## மிகவேகமாக 200ஐ நோக்கி முன்னேறுகிறது செம்மணி

செம்மணிமனிதப்புதைகுழிஎன்றுஅறியப்படும் அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானப் புதைகுழிகளில் இருந்து கண்டுபிடிக்கப்படும் எலும்புக்கூடுகள்மற்றும்மனித எலும்புஎச்சங்களின் எண்ணிக்கை மிகவிரைவாக 200ஐ நோக்கி முன்னேறி வருகின்றது. நேற்று வரையில் 187 பேருடைய எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று மட்டும் புதிதாகப் 10 எலும்பு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

செம்மணி மனித புதைகுழியில் நேற்று 10 எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் 10 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது என்று அகழ்வுப் பணியில் ஈடுபடும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை தொடங்கப்பட்டன. ☞ 3

### அரசுத் தலைவர், பிரதமர், அமைச்சர் உட்பட

## மாகாணத் தேர்தல் குறித்த நிலைப்பாட்டை சகல கட்சிகளும் உடன் அறிவிக்கவேண்டும்

### கபே அமைப்பு வலியுறுத்து

மாகாணசபைத்தேர்தல்தொடர்பில் ஆளும்தரப்புஉட்படசகலஅரசியல் கட்சிகளும்வெகுவிரைவில்தத்தமது நிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும் என சுதந்திரமானதும் நீதியானதுமானதேர்தல்களுக்கான மக்கள் இயக்கம் (கபே அமைப்பு) வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று வெள்ளிக் கிழமைசெய்தியாளர்களிடம்பேசிய கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர்மனாஸ்மகீன்இதனை வலியுறுத்தினார்.

மாகாணசபைத் தேர்தல்கள் காலம் தாழ்த்தப்பட்டமைக்கான பொறுப்பினை நல்லாட்சி ஆளும்தரப்பே ஏற்கவேண்டும். வெகு விரைவில் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் சகல அரசியல் கட்சிகளும்தமதுநிலைப்பாடுகளை அறிவிக்க வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல் ☞ 2

## அரசியல் துன்புறுத்தலை நிறுத்தும் பயணம் தொடரும்

### சஜித் நேற்று அறிவிப்பு

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே எமது பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயல்முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்களுடன் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## நாடு திரும்பிய உடனே ரணிலை பார்த்த ஹர்ஷ

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பியவுடன் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குச் சென்று முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பார்த்துள்ளார். தன்னை அரசியலுக்குள் கொண்டு வந்த தலைவரைப் பார்க்கச் சென்றதாக செய்தியாளர்களிடம் ☞ 2

## எதிர்க் கட்சிகளை பழிவாங்குவதை விடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

ஆளும்தரப்பு அதன் ஊழல், மோசடிகளைமறைப்பதற்காகஅதிகாரத் தைப் பயன்படுத்த முயற்சிக்கிறது. இவ்வாறு ஆளும்தரப்பின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராகவும், அடக்குமுறைகளுக்குஎதிராகவும்குரல் கொடுப்பதற்காகவே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எதிர்க்கட்சிகள் மீதான அரசியல் பழிவாங்கலை விடுத்து பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்யளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பின்அடக்குமுறைகளைஒழிப்பதற்கு பல்வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 3

## அணிசேராக் கொள்கையை கொண்டு ஏனைய நாடுகளுடன் ஒத்துழையுங்கள்

### அமெரிக்க பிரதிநிதிகள் குழு சபாநாயகரிடம் வலியுறுத்து

ஆசியாவில் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டநாடாக, இலங்கை உலகின் ஏனையநாடுகளுடன்ஒத்துழைத்துச் செயற்படுவதாகவும், இதுவரை இலங்கைக்கு வழங்கிய ஆதரவை எதிர்காலத்திலும் வழங்குமாறு ஐக்கிய அமெரிக்காவின் ☞ 2

## வைத்தியசாலையை விட்டு வெளியேறினார் ரணில்

தனிப்பட்ட வெளிநாட்டு பயணமொன்றின் ஊடாக 169 இலட்சம் ரூபா அரச நிதியை தவறாக பயன்படுத்தினார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில்கைதுசெய்யப்பட்டரணில்விக்ரமசிங்க, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், அங்கிருந்து நேற்று வெளியேறினார்.

கொழும்புதேசியமருத்துவமனையின் ☞ 3

## ஊழல் மோசடி மீதான கடும் நடவடிக்கை அச்சமே எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைத்துள்ளன

### இப்படிச் சாடுகிறார் தொழில் பிரதி அமைச்சர்

அரசமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆளும்தரப்பின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சிகளின்ஆட்சியில்அரசமைப்பு எவ்வாறு செயற்படுத்தப்பட்டது, குடும்ப ஆட்சி நிர்வாகம் பற்றி நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஊழல் மோசடிக்குஎதிராககடுமையான நடவடிக்கைஎடுக்கப்படும்என்ற ☞ 3

## பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் ஆளும்தரப்பு வெளிப்படையாக இல்லை

### முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச குற்றச்சாட்டு

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவை தயாரித்தல் தொடர்பில் ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையில் செயற்படவில்லை. துறைசார் நிபுணர்கள்,சிவில் அமைப்பினர் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எவ்வித ஆலோசனைகளும்பெற்றுக்கொள்ளப்படவில்லைஎன முன்னாள்நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அரசுத் தலைவர் சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

உத்தேசபுதியபயங்கரவாதஎதிர்ப்புச்சட்டவரைவு தொடர்பில் அவரிடம் வினவியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவுக் கான பணிகள் எதிர்வரும் மாதத்துக்குள் நிறைவுப்படுத்தப்படும் என்று நீதியமைச்சு குறிப்பிட்டுள்ளமை கவனத்திற்கொள்ளவேண்டும்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை நீக்குவதாகவும், அதற்குப் பதிலாகப் பிறிதொரு சட்டத்தை ☞ 3

## இனி இது .....

தகவல்களை உருவி அவற்றைப் பொதுவெளியில் பகிரங்கப்படுத்தி அமெரிக்காவின் மோசமான பக்கங்களை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியதன் மூலமே அசாஞ்சேயும் அவரது விக்கி லீக்கஸ் இணையத்தளமும்பெரும்புகழ்பெற்றிருந்தன.

இதனைச் செய்த அசாஞ்சே அதற்காக மிக நீண்ட காலமாக பெரும் துன்பங்களை அனுபவித்தார். மிகஅண்மைக்காலமாகத்தான் அவர் மீதான குற்றச்சாட்டுக்களை, சட்ட நடவடிக்கைகளை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கைவிட்டன.

ஜூலியன் அசாஞ்சே செய்த வேலைகளில் ஒன்று அமெரிக்காவிற்கு உலகம் எங்கும் அமைந்துள்ள தூதரகங்களில் இருந்து தலைநகர் வோஷிங்ரனுக்கு ஒரு குறிப்பிட்ட காலங்களில் அனுப்பப்பட்ட தகவல்களை உருவி வெளியிட்டமை. இந்தத் தகவல்கள் அமெரிக்க இராஜதந்திர மொழியில் 'கேபிள்கள்' எனப்பட்டன. இவ்வாறு தூதரகங்களால் அனுப்பப்பட்ட கோடிக்கணக்கான கோப்புகளை இன்றும் விக்கி லீக்ஸ் தளத்தில் காணமுடியும்.

அப்படி கொழும்புத் தூதரகத்தில் இருந்து வோஷிங்ரனுக்கு அனுப்பப்பட்ட 'கேபிள்'களும் அவற்றில் அடக்கம். போர்க் காலத்தில் கொழும்பிலிருந்து அமெரிக்கத் தூதுவர் அனுப்பிய பல முக்கியமான தகவல்கள் அவற்றில் அடங்கியிருந்தன. இலங்கையின் இறுதிப் போர் தொடங்கிய 2006 காலப் பகுதியில் விக்கி லீக்ஸ் தொடங்கப்பட்டது. போர் முடிவடைந்த காலப்பகுதியில் அதுவும் உச்சத்தை எட்டியிருந்தது. அதனால் இலங்கைப் போர் பற்றிய தகவல்கள் அப்போது பரபரப்பான செய்திகளாக இருந்தன.

போர் முடிவடைந்த கையோடு, அந்தப் போரில் பெருமளவில் போர்க் குற்றங்களும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களும் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களும் மீறப்பட்டிருந்த நிலையில், அவை பற்றிய ஒவ்வொரு தகவல்களும் பெரும் செய்திகளாக மாறியிருந்தன. அப்படிப்பட்ட தகவல்கள் அப்போது இலங்கையில் இருந்த எல்லா ஊடகங்களிலும் வெளியாகிக்கொண்டிருந்தன.

அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் நடத்திய போர்கள் பற்றிய பெரும் பரபரப்புக்குரிய தகவல்களாக உலக ஊடகப் பரப்பில் சுற்றிவந்த நிலையில், இலங்கையில் நடந்த போர் குறித்து அமெரிக்கத் தூதரகம் அனுப்பிய தகவல்கள் இலங்கை ஊடகங்களிலும் வெளியாகி வந்தன. அத்தகைய ஒரு சூழலில் விக்கி லீக்ஸில் வெளியாகிய ஒரு ஆவணத்தின் அடிப்படையில் உதயன் பத்திரிகையில் எழுதப்பட்ட ஒரு செய்திக்கு எதிராக ஈபிடிபி அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த விக்கி லீக்ஸ் ஆவணத்தில் ஈபிடிபி அமைப்புக்கும் இராணுவத்தினருக்கும் இருந்த தொடர்புகள் பற்றியும் அன்றைய காலத்தில் இராணுவத்தினருக்கு தமிழ் பெண்களை பாலியல் தொழிலாளர்களாக விநியோகிக்கும் பொறிமுறைகள் பற்றியும் பல்வேறு தரப்பினரும் கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்திற்குவழங்கியதகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன. உதயன் அதனைச் செய்தியாக்கி இருந்தது. அதற்கெதிராக டக்ளஸ் தேவானந்தா வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

உதயன் செய்தியால் தனக்கு மான நஸ்டம் ஏற்பட்டது என்பதுதான் டக்ளஸ் தேவானந்தாவின் குற்றச்சாட்டு. 500 மில்லியன் ரூபாய் இழப்பீடு கேட்டு அந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். ஈபிடிபி என்றால் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என்ற அடிப்படையிலேயே செய்தியால் ஈபிடிபிக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய களங்கம் தனக்கும் ஏற்படுத்தப்பட்ட களங்கம் என்று தெரிவித்தே அவர் அப்படியொரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார். டக்ளஸ் நீதிமன்றத்தில் அப்படியொரு வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார் என்று உதயன் ஒரு செய்தியை வெளியிட்டது. வழக்கில் அவர் சமர்ப்பித்திருந்த ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டிருந்த விடயங்களையும் அதில் குறிப்பிட்டிருந்தது. உடனே அதற்கும் ஒரு வழக்குதாக்கல்செய்தார் டக்ளஸ்தேவானந்தா. அதாவது அவர் உதயன் பத்திரிகைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருக்கிறார் என்று வெளியிட்ட செய்திக்கும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று அந்த வழக்கின் தீர்ப்பு வந்திருக்கிறது. உதயன் பத்திரிகைக்குச் சார்பாக வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது.

விக்கி லீக்ஸ் தகவல்களை உதயன் பத்திரிகை வெளியிட்டது தொடர்பான தனது முதல் வழக்கில் டக்களஸ் தேவானந்தா ஏற்கனவே தோல்வியடைந்திருந்தார். இரு வழக்குகளையும் உதயன் பத்திரிகைக்குச் சார்பாக வாதாடியவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன். உதயன் பத்திரிகையின் உரிமையாளரான சரவணபவன் முன்னர் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராக இருந்தவர். அப்போது இருவரும் நெருக்கமான சகாக்களாக இருந்த நிலையில் சுமந்திரன் இந்த வழக்குகளை இலவசமாக, எந்தக் கொடுப்பனவும் பெறாமல் வாதாடி வந்தார். எனினும் பின்னாட்களில் இவர்கள் இருவருக்கும் இடையில் அரசியல் மோதல் வலுத்து இருவரும் அரசியலில் எதிரெதிர் துருவ நிலைப்பாடுகளை எடுத்த பின்னரும், உதயன் பத்திரிகை தேர்தல்களில் சுமந்திரனுக்கு எதிரான நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்திய பின்னரும் இந்த வழக்குகளைத் தொடர்ந்து செய்து வந்தார் சுமந்திரன். அப்போதும் அவற்றை இலவசமாகவே அவர் மேற்கொண்டு வந்தார்.

இந்த வழக்குகள் மட்டுமல்ல முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் டயஸ் மற்றும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாக இருந்தவரான மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க ஆகியோர் உதயன் பத்திரிகைக்கு எதிராகத் தாக்கல் செய்த வழக்குகளையும் சுமந்திரன் இலவசமாகவே உதயன் பத்திரிகைக்காக வாதாடி இருந்தார். இராணுவத் தளபதிகளால் தாக்கல் செய்யப்பட்ட அந்த வழக்குகள் இரண்டும் பின்னர் அவர்களால் திரும்பப் பெறப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்வாறு உதயன் பத்திரிகையின் சார்பாக தான் வழக்காடிய அனைத்து வழக்குகளையும் வெற்றிகரமாக முடித்துக் கொடுத்துள்ளார் சுமந்திரன். அந்த நிறுவனத்துடனும் அதன் தலைவருடனும் அரசியல் உறவுகள் நெறிகெட்ட பின்னரும் தான் எடுத்துக்கொண்ட வழக்குகளில் இருந்து விலகாமல் அவற்றை முடித்துக்கொடுத்து தான் ஒரு தொழில் வாண்மையாளர் என்பதைத் தெளிவாக நிரூபித்துள்ளார் சுமந்திரன். அரசியலுக்கு அப்பாற்பட்டது தொழில் என்பதை அவர் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணைவேண்டும்

## ஐ.நா. வதிவிடப் பிதிநிதி வலியுறுத்து

இலங்கையில் பல தசாப்தகாலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் வாழ்ந்துவருவதாகவும், அந்நிலைதொடர்வதன் ஊடாகக் கடந்தகாலக் காயங்களை ஆற்றமுடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சே, மீறல்களின் தீவிரத்தன்மையை உணர்த்தும் மனிதப்புதைகுழிகள் தொடர்பில் நம்பத்தகுந்த சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு (30) காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் நேற்று கொழும்பில் அமைந்துள்ள அலரி மாளிகையில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருடனான தமது உடனிருப்பபை வெளிப்படுத்தி உரையாற்றிய ஐ.நா வதிவிடப்பிரதிநிதி, இலங்கையைப் பொறுத்தமட்டில் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேசதினமானது சுமை மிகுந்ததாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் பலதசாப்தகாலமாக வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தமது அன்புக்குரியவர்களுக்குஎன்ன நேர்ந்தது எனத் தெரியாமல் வாழ்ந்துவருவதாகவும், அந்நிலை தொடர்வதன் ஊடாகக் கடந்தகாலக் காயங்களை ஆற்றமுடியாது எனவும் குறிப்பிட்ட அவர், இருப்பினும் அந்த உறவுகள் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் நீதிகோரித் தொடர்ந்து போராடிவருவதாகத் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி மற்றும் நல்லிணக்கம் என்பன உறுதிப்படுத்தப்படாமல் நாடு என்ற ரீதியில் நிலையான வளர்ச்சியோ அல்லது அபிவிருத்தியோ சாத்தியமில்லை எனவும் மார்க் அன்ட்ரூ பிரான்சே எடுத்துரைத்தார்.

அதேபோன்று தற்போது யாழ். செம்மணியில் அடையாளங்காணப்பட்டுள்ள மனிதப்புதைகுழியில் சிறுவர்களது மனித எலும்புக்கூடுகள் உள்ளிட்ட மனிதஎச்சங்களும், பாடசாலைப் புத்தகப்பை உள்ளிட்ட பொருட்களும் கிடைக்கப்பெற்றிருப்பதாகவும், இது மீறல்களின் தீவிரத்தன்மையை உணர்த்துவதாகவும் குறிப்பிட்ட அவர், அண்மையில் நாட்டுக்கு வருகைதந்திருந்த ஐ.நா மனித உரிமைகள் உயராணையர் வோல்கர் டேர்க் செம்மணி மனிதப்புதைகுழியைச் சென்றுபார்வையிட்டதை நினைவுகூர்ந்ததுடன் இம்மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் நம்பத்தகுந்த சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம் என வலியுறுத்தினார்.

குறிப்பாக நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு உண்மை மற்றும் நீதியை உறுதிப்படுத்தவேண்டியது அவசியம் எனத் தெரிவித்த ஐ.நா வதிவிடப் பிரதிநிதி, மனிதப்புதைகுழி அகழ்வு, கண்காணிப்பு, பகுப்பாய்வு மற்றும் விசாரணை என்பன உள்ளடங்கலாக காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் செயன்முறைகளில் பாதிக்கப்பட்ட தரப்பினர் உரியவாறு உள்வாங்கப்பட்டு, பங்காளிகளாக்கப்படவேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் தெரிவித்தார்.

அத்தோடு 'நீண்டகாலமாக நிலுவையில் உள்ள வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் குறித்த வழக்குகள் தொடர்பில் துரித விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும். வலிந்து காணாமலாக்கப்படல் விவகாரத்தைப் பொறுத்தமட்டில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஒத்துழைப்புடன் செயலாற்றுவதன் ஊடாகவே அவர்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்பமுடியும்' என்றும் மார்க் அன்ட்ரூ பிரான்சே சுட்டிக்காட்டினார்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மற்றும் இவ்விவகாரம் தொடர்பில் இயங்கிவரும் செயற்பாட்டாளர்கள் கண்காணிக்கப்படுதல் மற்றும் அவர்களுக்கு எதிராக வன்முறைகள் பிரயோகிக்கப்படல் என்பன குறித்து தீவிர கரிசனையை வெளிப்படுத்திய அவர், நீதியை நாடுவது என்பது ஒருபோதும் குற்றமாக இருக்கமுடியாது என்றார்.

'குற்றங்களில் ஈடுபட்டவர்கள் முறையான விசாரணைகள் ஊடாகப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும். அதற்கு அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் தயாராக இருக்கிறது. அதற்கமைய கடந்தகால மீறல்கள் தொடர்பில் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள்நிகழாமை என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும்' எனவும் ஐ.நா வதிவிடப்பிரதிநிதி வலியுறுத்தினார்.

## மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமை தொடர்பில் நாடாளுமன்றத்திலேயே திருத்தங்கள் முன்வைக்கப்படவேண்டும். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதா அல்லது திருத்தப்பட்ட கலப்பு முறைமையில் தேர்தலை நடத்துவதா என்பதை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டு;ம்.

ஆனால் 2017இல் ஆட்சியிலிருந்த ஆளும்தரப்புக்கோ 2019இல் ஆட்சியிலிருந்த ஆளும்தரப்புக்கோ வழங்கிய ஆணையை விட தற்போதுள்ள ஆளும்தரப்புக்கு அதிக பெரும்பான்மையுடனான ஆணையை வழங்கியிருக்கின்றனர். எனவே அரசுத் தலைவர் அநுரகுமாரவிடமும், பிரதமர் ஹரிணியிடமும் குறிப்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடமும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் அறிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அல்லது மாகாணசபை முறைமையை நீக்கும் நிலைப்பாட்டில் இருந்தால் அதனையாவது மக்களிடம் கூறுமாறு வலியுறுத்துகின்றோம். ஒரு மாதத்துக்கு முன்னர் எமது அமைப்பினால் மாகாணசபை தொடர்பில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அதற்கு எவ்வித பதிலும் இல்லை. அதேவேளை அரசியல் கட்சிகளுக்கும் தாம் எதிர்க்கட்சிலிருக்கும் போது மாத்திரமே மாகாணசபைத் தேர்தல் நினைவுக்கு வருகிறது. ஆனால் அவர்கள் ஆட்சியமைக்கும் போது அதனை மறந்து விடுகின்றனர் என நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மஹீம் மேலும் தெரிவித்தார்.

## அணிசேராக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் உறுப்பினர்களிடம் சபாநாயகர் வலியுறுத்தினார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நாடாளுமன்ற கற்கைகள் மற்றும் ஆய்வு மையமாக மாற்றுவது குறித்தும் சபாநாயகர் குழுவினருக்குத் தெரிவித்தார். அதற்குத் தேவையான வளங்களை வழங்கத் தயாராக இருப்பதாக அக்குழுவினர் உறுதியளித்தனர்.

ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டெரெக் லூய்டன் உள்ளிட்ட குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்னவை நாடாளுமன்றத்தில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் இலங்கை நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை நாடாளுமன்றத்தில் இரண்டு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள ஐக்கிய அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் அதிகாரிகள், அவர்களது செயற்பாடுகள் குறித்து விளக்கமளிக்கும்போது, உலகளாவிய ரீதியில் தற்போது 15 சட்டவாக்க சபைகளுடன் இணைந்து செயற்படுவதாகத் தெரிவித்தனர்.

இதில் வரவுசெலவுத்திட்ட மேற்பார்வை மற்றும் நிதிப் பொறுப்பு, குழுக்களின் வினைத்திறனான செயற்பாடு, சட்ட வரைவு நடைமுறை மற்றும் ஆராய்ச்சி மற்றும் கொள்கை வகுத்தல் போன்ற பல்வேறு செயன்முறைகளுக்கு சட்டவாக்க சபைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது அவர்களின் நோக்கமாகும் எனத் தெரிவித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைப் நாடாளுமன்றத்துடன் இணைந்து தேவையான அறிவைப் பரிமாறிக்கொள்வதற்காக வருகைதந்தமைக்கு தனது நன்றியைத் தெரிவித்தார். பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அனுமதிப்பதன் மூலம் சட்டவாக்க செயன்முறை எவ்வாறு வலுவாக முன்னோக்கிக் கொண்டு செல்லப்படுகின்றது என்பதை சபாநாயகர் இந்தக் குழுவினருக்கு விளக்கினார்.

மேலும், முழுமையான வெளிப்படைத் தன்மையுடன் செயற்படும் சட்டவாக்க சபையின் பங்கு, குழுக்கள் மற்றும் ஒன்றியங்கள் மூலம் நடைபெறும் பணிகள் ஊடாக சட்டவாக்க சபை எவ்வாறு வலுவாக செயற்படுகின்றது என்பதையும் சபாநாயகர் விளக்கினார்.

சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நாடாளுமன்ற கற்கைகள் மற்றும் ஆய்வு மையமாக மாற்றுவது குறித்தும் சபாநாயகர் இந்தக் குழுவினருக்குத் தெரிவித்ததுடன், அதற்குத் தேவையான வளங்களை வழங்கத் தயாராக இருப்பதாக அக்குழுவினர் குறிப்பிட்டனர்.

ஆசியாவில் அணிசேரா வெளிநாட்டுக்

தொடர்ச்சி 3ம் பக்கம்....

## அணிசேராக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கையைக் கொண்ட நாடாக, இலங்கை உலகின்ஏனையநாடுகளுடன்ஒத்துழைத்துச் செயற்படுவதாகவும், இதுவரை இலங்கைக்கு வழங்கிய ஆதரவை எதிர்காலத்திலும் வழங்குமாறு ஐக்கிய அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையின் ஜனநாயகத்துக்கான பங்குடைமையின் உறுப்பினர்களிடம் கௌரவ சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, இந்தத் தூதுக்குழுவினர் 2025 ஆகஸ்ட் 28 ஆம் திகதி அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (கலாநிதி) ஹர்ஷ டி சில்வா உள்ளிட்ட அக்குழுவின் உறுப்பினர்களை சந்தித்தனர். நிதி பற்றிய குழுவின் பணிகள் மற்றும் தற்போதைய சவால்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாடாளுமன்றத்தில் உருவாக்கப்படவுள்ள வரவுசெலவுத்திட்ட அலுவலகம், நிதி பற்றிய குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பணச்சூதாட்ட ஒழுங்குபடுத்தல் தொடர்பான சட்டமியற்றல் உள்ளிட்ட இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்து குழுவின் தலைவர் விளக்கினார். அத்துடன், சட்டவாக்கச் செயன்முறை தொடர்பான இரு நாடுகளினதும் அனுபவங்கள் இதன்போது பரிமாறப்பட்டன.

அத்துடன், பொருளாதார அபிவிருத்தி மற்றும்சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் (சட்டத்தரணி) லக்மாலி ஹேமச்சந்திரவையும் இந்தத் தூதுக்குழுவினர் சந்தித்தனர். துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் பணிகள் மற்றும் விடயப்பரப்பு, தற்போதுள்ள சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தூதுக்குழுவினர் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர உள்ளிட்ட செயலாளர்நாயகத்தின் அலுவலகத்தின் உயர் அதிகாரிகளுடனும் 26 ஆம் திகதி கலந்துரையாடினர். பணியாட்தொகுதியின் தலைவரும் நாடாளுமன்றபிரதிச்செயலாளர்நாயகமுமான சமிந்த குலரத்ன மற்றும் நாடாளுமன்றத்தின் திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர்.

அரச சட்டங்கள் மற்றும் தனியார் உறுப்பினர்களின் சட்ட மூலங்கள் உள்ளிட்ட இரு நாடுகளின் சட்டவாக்க செயன்முறை, நாடாளுமன்றக் குழு அமைப்பு உட்பட நாடாளுமன்ற முறைமை மற்றும் மரபுகள் போன்ற விடயங்களில் இதன்போது அறிவைப் பரிமாறிக்கொண்டனர்.

## வைத்தியசாலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கே, நேற்று பிற்பகல் மருத்துவமனையில் இருந்து சிகிச்சைகளை முடித்துக்கொண்டு வெளியேறினார்.

காலையில் ரணில், அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து பொதுச் சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட பின்னர் இவ்வாறு அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

முன்னதாகக் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவைப் பிணையில் விடுவிக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் ஒகஸ்ட் 26 உத்தரவிட்டது. கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர, சந்தேகநபரான ரனில் விக்கிரமசிங்கவை 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்தார்.

மருத்துவமனையிலிருந்துவெளியேறிய போதும், முன்னாள் அரசுத் தலைவர் மருத்துவ ஆலோசனையின்படி வீட்டிலேயே ஓய்வெடுப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வீட்டில் தங்கியிருக்கும்போது, ரணில் விக்ரமசிங்கேவின் உடல்நிலையை அவரது குடும்ப மருத்துவர்கள் உன்னிப்பாகக் கண்காணிப்பார்கள் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒன்றோடொன்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூடு ஒன்றும் பின்னிப் பிணைந்தவாறு உள்ளது. அதனை மீட்டெடுக்கும் பணிகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. இன்று அது அனேகமாக அகற்றி எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனை முற்றாக அகழ்ந்து எடுத்த பின்னர், சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரமே குறித்த எலும்புக்கூடுகள் தொடர்பில் உறுதியாகக் கூறமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை , இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வுப் பணிகள் கடந்த திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் சிறியவர்கள் மற்றும் சிசுக்களின் எலும்புக்கூட்டு தொகுதிகள் பலவும் அடையாளம் காணப்பட்டு வருகின்றன.

அத்துடன் ஒன்றுடன் ஒன்று அருகருகே புதைக்கப்பட்ட வகையிலும் கால்கள் மடிந்த நிலையிலும் எலும்புக் கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை வரையில் கட்டம் கட்டமாக 46 நாட்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## எதிர்க் கட்சிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவத்தில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட பிரதான கட்சிகள் இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எமது நோக்கம் அடக்குமுறைகளுக்கு எதிராக செயற்படுவதாகும்.

ஆளும்தரப்பு அதன் ஊழல், மோசடிகளை மறைப்பதற்காக அதிகாரத்தைப் பயன்படுத்த முயற்சிக்கிறது. இவ்வாறு ஆளும்தரப்பின் அதிகார துஷ்பிரயோகத்துக்கு எதிராகவும் நாம் ஒன்றிணைந்து குரல் கொடுப்போம். பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளும் எம்முடன் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அரசியல் ரீதியான கொள்கைகளில் எம்க்கிடையில் வேறுபாடு காணப்படுகின்றபோதிலும், இந்தவிவகாரத்தில் நாம் இணைந்து செயற்பட தயாராகவே இருக்கின்றோம்.

நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடிய ஆதரவாளர்களால் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு எவ்வித இடையூறும் விளைவிக்கப்படவில்லை. நீதிமன்றத்துக்கு பொது மக்கள் செல்வதற்கு எவ்வித தடையும் இல்லை. சட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகள் இல்லை. அவ்வாறிருக்கையில் அன்றைய தினம் பொது மக்கள் உட்பட மேலும் பலருக்கு நீதிமன்றத்துக்குள் செல்வதற்கு தடையை ஏற்படுத்தியது யார்?

வீதிகளைக் கூட வீதித்தடைகள் மூலம் மூடி பொலிஸாரே தடையை ஏற்படுத்தினர். மாறாக மக்கள் எவ்வித தடையையும் ஏற்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் அன்றைய தினம் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் அதனை நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால் நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாது.

ரணில் விக்ரமசிங்க ஒரு பிரபலமான நபராவார். எனவே தான் அவர் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது மக்கள் ஆர்வமாக இருந்தனர். அந்த அடிப்படையிலேயே நீதிமன்ற வளாகத்திலும் ஒன்று கூடினர். அது தவறு என எந்த சட்டத்தில் கூறப்பட்டுள்ளது? அரசியல் பழிவாங்கல்களின் மாத்திரமே ஆளும்தரப்பு அவதானம் செலுத்தி வருகிறது.

அதனை விடுத்து நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? எனவே அரசியல் பழிவாங்கலை விடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என்றார்.

## மிகவேகமாக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்தாவது நாளாக நேற்று பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியிருக்கிறது. இதில் 37 நாள் பணிகள் முடிவடைந்துள்ளன.

செம்மணியில் முதற்கட்டம், இரண்டாம் கட்டம் இரண்டிலும் மொத்தமாக 174 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று வரையில் முற்றாக அகழ்ந்து அகற்றப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

## ஊழல் மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சத்தால் எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைந்துள்ளார்கள் என தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவது ஆளும்தரப்புக்கு எவ்விதத்திலும் சவாலாக அமையாது. இவர்களின் தற்போதைய கூட்டிணைவு அவர்களின் எதிர்கால அரசியலுக்கே சவாலாக அமையலாம். பிரதான நிதி மோசடியாளரை கைது செய்தவுடன் ஏனைய ஊழல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்துள்ளார்கள்.

சட்டத்துக்கு அமையகைதுகள் இடம்பெறும் போது அது அரசியலமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிடுகிறார்கள். அரசியலமைப்பு பற்றி தற்போது பேசும் முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன 2018 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு முரணாக ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கி விட்டு மஹிந்த ராஜபக்சவை சட்டவிரோதமான முறையில் பிரதமராக நியமித்ததை மறந்து விட்டார்.

நீதித்துறை சுயாதீனமாக செயற்பட இடமளிக்க வேண்டும். அரசியல் அழுத்தம் பிரயோகிக்க கூடாது என்று முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச குறிப்பிடுகிறார். முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை சட்டவிரோதமான முறையில் பதவி நீக்கி, அவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து விசாரணை செய்ததையும் மறந்து விட்டார்.

அரசமைப்புடனான சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆளும்தரப்பின் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் அரசமைப்பு எவ்வாறு செயற்படுத்தப்பட்டது என்பதையும் குடும்ப ஆட்சி நிர்வாகம் பற்றியும் நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

முன்னாள் அரசுத் தலைவர் கோட்டபய ராஜபக்ச ஒரே நாடு ஒரே சட்டம் என்பதை பேச்சளவில் மாத்திரம் செயற்படுத்தினார். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை முன்னிலைப்படுத்தியே தற்போதைய ஆளும்தரப்பு செயற்படுகிறது. சட்டத்தின் முன் எவருக்கும் சிறப்புச் சலுகை வழங்கப்படமாட்டாது என்றார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயற்றுவதாகவுமே தேசிய மக்கள் சக்தி தேர்தல் பரப்புரை மேடைகளில் குறிப்பிட்டது. குறிப்பாக இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்து அதற்குப் பதிலாக பிறிதொரு சட்டத்தை இயற்றுவதற்கு நாங்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளுக்கும் எதிராகவே தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்திலும், மக்கள் மத்தியிலும் செயற்பட்டது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி, தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு அமைய பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது.

இலங்கையில் பயங்கரவாத அமைப்பு இல்லை என்ற நிலைப்பாட்டில் இருந்துக்கொண்டு பயங்கரவாதத்தை அலட்சியப்படுத்த முடியாது. ஏனெனில் பூகோள பயங்கரவாதம் பல்வேறு வழிகளில் இன்றும் தாக்கம் செலுத்துகின்றன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்தல், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவை தயாரித்தல் தொடர்பில் ஆளும்தரப்பு வெளிப்படைத்தன்மையில் செயற்படவில்லை.

துறைசார் நிபுணர்கள், சிவில் அமைப்பினர் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட தரப்பினரிடமிருந்து எவ்வித ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ள உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம். இந்த வரைவின் உள்ளடக்கம் தீவிரமாக ஆராயப்பட வேண்டும் என்றார்.

## நாடு திரும்பிய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

முன்னாள் அரசுத் தலைவர் ரணிலைப் பார்த்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஹர்ஷ டி சில்வா, என்னை அரசியலுக்குக் கொண்டு வந்த, நாம் மதிப்பளிக்கும் எமது முன்னாள் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பார்ப்பதற்காகச் சென்றேன். அவர் ஆரோக்கியமாக இருக்கின்றார். தற்போது அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்து மாற்றப்பட்டிருக்கின்றார்.

கோபம் மற்றும் பழிவாங்கும் அரசியல் நாட்டுக்கு பொருத்தமானதல்ல. இவ்வாறான அரசியலால் சமூகத்திலுள்ள பிரிவினைவாதம் மேலும் அதிகரிக்கும். பிரிவினைவாதங்களை சரி செய்வதை விடுத்து அவற்றை மேலும் ஊக்குவிப்பதானது நாட்டின் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கும் எனத் தெரிவித்தார்.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தை வலுப்படுத்துவதும் அரசியல் துன்புறுத்தலை நிறுத்துவதுமே இந்தப் பயணத்தின் நோக்கமாகும். இதன் ஊடாக நாட்டில் ஊழல், மோசடிகளை ஒழிக்கும் செயல்முறைக்கு ஒத்துழைப்பை வழங்குவோம். அதற்கு அப்பால் செயற்படப் போவதில்லை. ஊழல், மோசடிக்கு எதிராக நாமே முதலில் உயர் நீதிமன்றத்துக்குச் சென்றோம். நாட்டையே வங்குரோத்தடையச் செய்தமைக்கு அடிப்படை உரிமை மீறல் வழக்கினை ஐக்கிய மக்கள் சக்தியே தாக்கல் செய்து தீர்ப்புகளைப் பெற்றுக்கொண்டது. ஊழல்வாதிகள் எம்மிடம் இல்லை என்று கூறி ஆளும்தரப்பும் , ஆட்சியாளர்களும் தாம் தூய்மையானவர்கள் எனக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தி அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல்களை தெளிவாகவே எதிர்க்கிறது. அடிப்படை உரிமைகள் அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பேச்சுச் சுதந்திரம், அரசியல் செயல்பாட்டுச் சுதந்திரம், மத சுதந்திரம் மற்றும் கலாச்சார சுதந்திரம் போன்றன காணப்படுகின்றன. இந்த அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டுள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தை தலைமையாகக் கொண்டு ஒன்றிணைந்து பயணிக்க ஒன்று சேருங்கள். பக்கசார்பற்ற வேலைத்திட்டம் பொது நன்மை, ஜனநாயகம், மனித மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதை மையமாகக் கொண்டு இந்த பயணம் அமையும் போது, சேரக்கூடியவர்கள் இந்தப் பயணத்தில் சேரலாம்.

நாட்டில் சுதந்திர ஊடகத்தைப் பாதுகாக்க வேண்டும். நாம் சமூகத்தின் கருத்துக்களை அறிந்துகொள்வதுடன், அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும் வேண்டும். இந்த ஊடகத்துறையின் மீது கை வைக்க ஆளும்தரப்பு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஜனநாயகத்தைப் பாதுகாக்க நல்லெண்ணத்துடன் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தில் சுதந்திர ஊடகங்களையும் பாதுகாப்போம் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வடக்கு மாகாண நீர் நெருக்கடிக்கு நிலையான தீர்வுகள் தேவை

இலங்கை இயற்கை வளங்களால் செழித்த தீவு. நீர் வளம் அதன் உயிர்நாடி. ஆனால் கடந்த நூற்றாண்டில் தொடர்ந்து நிகழ்ந்த தவறான அரசியல் மற்றும் வள முகாமைத்துவக் கொள்கைகளால், இந்நாடு தனது நீர் வளங்களை நிலையான முறையில் கையாளத் தவறியுள்ளது. இதன் விளைவாக இன்று நீர் பற்றாக்குறை மிகப்பெரிய நெருக்கடியாக மாறி வருவதோடு, வடக்கு மாகாண மக்களிடம் அது மிகக் கடுமையாக வெளிப்படுகிறது.

தமிழர் வரலாற்றில் வடக்கு மாகாணம் எப்போதுமே வறட்சிக்கேற்ற காலநிலையையே கொண்டிருந்தது. பழைய அரசர்கள் கட்டிய பாசனத் தொட்டிகள், ஏரிகள், கால்வாய்கள் ஆகியவை மழை குறைவான பிரதேசங்களில்கூட விவசாயத்தைக் காப்பாற்றியவை. ஆனால் இன்றைய அரசின் அலட்சியக் கொள்கைகளால் அவை பலவும் சேதமடைந்தவையாகவோ, பயன்படுத்தப்படாமல்கைவிடப்பட்டவையாகவோ உள்ளன.

இந்தப் புறக்கணிப்பின் விளைவாகவே இன்று நீர் சமநிலை இல்லாமை அதிகரித்துள்ளது.

இப்போது நீடித்து வரும் வறட்சி நிலைமையால் வடக்கு மாகாண மக்கள் மிகுந்த துன்பத்திற்கு உள்ளாகியுள்ளனர். கிணறுகள் வறண்டு போகின்றன, விவசாய நிலங்கள் கைவிடப்படுகின்றன, கால்நடைகள் தண்ணீரின்றி தவிக்கின்றன. சமீபத்தில் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (NWSDB) அறிவித்தபடி, முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் ஆபத்தான அளவிற்கு குறைந்திருப்பதோடு, குடிதண்ணீர் விநியோகத்திலும் இடையூறுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

இந்த வறட்சிக் காலத்தில் 24 மணிநேர நீர்வழங்கலைக் குறைக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை வெளிப்படையாகவே கூறியுள்ளது. இலங்கையின் ஏனைய பகுதிகளிலேயே இந்த நிலமை என்றால் வடக்குப் பகுதிகளில் நிலமை இன்னும் மோசமாக உள்ளது. அதற்குக் காரணம் இங்கு நீர் சமநிலை, அடிப்படை வசதிகள், மழைப்பொழிவு, மக்கள் தேவைகள் ஆகியவை மிகவும் குறைபாடான நிலையில் உள்ளன.

வடக்கு மாகாணத்தின் பெரும்பாலான மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பின் மீது தான் தங்கள் வாழ்வாதாரத்தை நம்பியுள்ளனர். நீர் பற்றாக்குறை காரணமாக:

விவசாய நிலங்கள் கைவிடப்படுகின்றன. காய்கறி, தானிய உற்பத்தி குறைவதால் உணவுப் பாதுகாப்பு சிக்கலில் உள்ளது. கால்நடைகள் நீர், தீவனம் இன்றி அழிந்து வருகின்றன. கிணறுகள் வற்றுவதால் குடிநீர் சுமைகள் அதிகரித்து, பெண்கள், குழந்தைகள் தூரம் நடந்து தண்ணீர் எடுக்கும் அவல நிலை தொடர்கிறது.

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) அறிக்கையின்படி, இலங்கையின் மக்கள்தொகையில் சுமார் 35.6% பேர் தண்ணீரின்றி பாதிக்கப்படுகின்றனர். அதிலும் வடக்கு மாகாண மக்களின் துயரம் அதிகம் என்பதைக் கணக்குகள் வெளிப்படுத்துகின்றன.

இலங்கையில் மழைபொழிவு சீராகக் கிடைப்பதில்லை. தென்மேற்குப் பருவமழையில் தெற்கு, மத்திய மலைப்பகுதிகள் அதிக மழை பெறுகின்றன. ஆனால்வடக்கு, கிழக்குபகுதிகள்பெரும்பாலும்வறட்சியுடன்போராடுகின்றன. இதற்கு மேலாக, நீர் எடுத்துச் செல்லும் கால்வாய், பாசனத் திட்டங்கள், நீர்த்தேக்கங்களின் பராமரிப்பு குறைவாகவே உள்ளதால், வடக்கு மாகாண மக்கள் அநியாயத்திற்குள்ளாகின்றனர்.

அதிக மக்கள் தொகை, திட்டமில்லா நகர வளர்ச்சி ஆகியவை நிலைமையை இன்னும் சிக்கலாக்குகின்றன. யாழ்ப்பாணம், வவுனியா போன்ற நகரங்களில் குடிநீர் தேவைகள் அதிகரித்தும், விநியோகம் சமமாக நடைபெறாததால் மக்கள் இடையூறுகளைச் சந்திக்கின்றனர்.

பாசனத் தொட்டிகள் மீளமைப்பு: பழைய தொட்டிகள், ஏரிகள், கால்வாய்களை அரசின் முன்னுரிமைப் பணிகளாக எடுத்துச் சீரமைத்தல்.

புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள்: வடக்கு – தெற்கு நீர்வளங்களை இணைக்கும் திட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டும். உதாரணமாக, மஹாவலி திட்டத்தின் சில நீர்நிலைகளை வடக்கு நோக்கி விரிவுபடுத்தல்.

காட்டுப்பகுதிகளைப் பாதுகாத்தல்: ஆறுகள், நீரோட்டங்கள் தோன்றும் மேல்நிலப் பகுதிகளில் காடுகளை வெட்டுதல் தடுக்கப்பட வேண்டும். நீர்வளக் கையொப்பப் பகுதிகள் (catchments) பாதுகாக்கப்படாவிட்டால் நீர் வளங்கள் குறைந்து விடும்.

மக்கள் விழிப்புணர்வு: நீர் வீணாவதைத் தடுக்கக் குடும்ப மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு பிரசாரங்கள் நடத்தப்பட வேண்டும். வாகனக் கழுவல், தோட்டங்களுக்கு அதிக நீர் செலவழித்தல் போன்றவை கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

நகரமைப்பு திட்டங்கள்: திட்டமில்லா நகர வளர்ச்சியைத் தடுக்க, நீர் தேவைகளை கருத்தில் கொண்ட நகரமைப்பு நடைமுறைக்கு வர வேண்டும்.

மழைநீர் சேகரிப்பு முறைகள்: வீடுகள், பள்ளிகள், அலுவலகங்களில் மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளை உருவாக்கும் (Rainwater Harvesting) முறைகளை கட்டாயமாக்கல்.

சர்வதேச உதவிகள்: UNDP, FAO போன்ற அமைப்புகள் எச்சரித்துள்ளபடி, நீர் நெருக்கடி ஒரு தேசிய அவசரநிலை எனக் கருதி சர்வதேச ஆதரவு பெறப்பட வேண்டும்.

வடக்கு மாகாண மக்களின் துயரம் வெறும் இயற்கை வறட்சியினால் மட்டுமல்ல, அரசின் தவறான கொள்கைகளாலும், புறக்கணிப்பாலும் ஏற்பட்டுள்ளது. இன்று எடுக்கப்படும் முடிவுகள்தான் நாளைய தலைமுறைக்கு நீர் வளம் கிடைக்குமா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும்.

நீர் வாழ்வின் அடிப்படை என்பதால், அதை வீணாக்காமல், நிலையான முறையில் கையாளுதல் இன்றே தொடங்கப்பட வேண்டும். வறட்சி இயற்கை சவாலாக இருக்கலாம்; ஆனால் தவறான திட்டமிடல் மற்றும் புறக்கணிப்பு அரசின் பொறுப்பு. அதனால், வடக்கு மாகாண மக்களுக்கு நீர் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் கடமையாகும்.

## குற்றக் கும்பலோடு கைதுசெய்யப்பட்ட பெண்ணும் குழந்தையும் நாடு வந்தனர்

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்கும்பல் உறுப்பினரான கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட குழுவுடன் கைது செய்யப்பட்ட பெண் மற்றும் குழந்தை இந்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலிருந்து யு.எல்-365 விமானத்தில் நேற்று மாலை சுமார் 5.50 மணியளவில் அவர்கள் இலங்கைக்கு வந்தடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கெஹல்பத்தர பத்மே தலைமையிலான குழு ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட நிலையில், அந்தப் பெண்ணும் குழந்தையும் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும், அந்தப் பெண் மீது கடுமையான குற்றவியல் குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படாததால், இந்தோனேசிய அதிகாரிகள் அவரைஇலங்கைக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை,பத்மே உள்ளிட்ட ஏனையஜவரையும் விரைவில் நாட்டுக்கு அழைத்துவருவதற்கான விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா நேற்று திடீர் கைது

### செம்டெம்பர் 12 வரையும் அவருக்கு மறியல்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா, கொட்ச்சிக்கடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். அதன்படி நேற்று பிற்பகல் (29) நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட அவரை எதிர்வரும் செப்டம்பர் 12 ஆம் திகதிவரை விளக்கமரியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மற்றும் நீர்கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான இல. 58, நீர்கொழும்பு வீதி, கொச்சிக்கடையில் வசிக்கும் பந்துல நாவுதுன்ன ஆகியோரை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள பீ 1024/ 2006 எனும் வழக்கு தொடர்பில் சந்தேகநபர்களாக பெயரிட்டு சட்ட நடவடிக்கை எடுக்க சட்ட மா அதிபர் ஆலோசனையளித்துள்ளார். அதனடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

## சாமர சம்பத்திற்கு எதிரான வழக்குகள் இனி ஜனவரியில்

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிரான இரண்டு வழக்குகளை அடுத்தாண்டு ஜனவரி 23 ஆம் திகதி மீண்டும் விசாரிக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் அசங்க எஸ். போதரகம முன்னிலையில் இந்த வழக்குகள் அழைக்கப்பட்டன. இதன்போது, விசாரணைகளின் முன்னேற்றத்தை இந்த வழக்குகள் ஜனவரி 23 ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு நீதிவான் உத்தரவிட்டார்.

ஊவா மாகாண முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், மாகாண சபைக்குச் சொந்தமான ஆறு நிலையான வைப்பு கணக்குகளை காலாவதியாகும் முன்பு ஒரு அரசு வங்கியில் இருந்து முறைகேடாக திரும்பப் பெற்றதன் மூலம் அரசாங்கத்திற்கு 1.73 பில்லியன் ரூபா நிதி இழப்பை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் சாமர சம்பத் தசநாயக்கவுக்கு எதிராக இந்தமுறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## அத்துரலியே ரத்ன தேரரின் மறியல் காலம் மேலும் நீடிப்பு

முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர்அத்துரலியே ரதன தேரரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுகேகொடை, கங்கொடவில நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இதுகுறித்துகொழும்புமாவட்ட குற்றவிசாரணைப் பிரிவினர்தாக்கல்செய்துள்ளவழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2020 பொதுத் தேர்தலில் கட்சிக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தைப் பெறுவதற்காக 'அபே ஜன பல' கட்சியின் பொதுச் செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸதேரர்கடத்தப்பட்டுதடுத்துவைக்கப்பட்டது தொடர்பான விசாரணைகள் தொடர்பாக இந்த வழக்கு நடைபெறுகிறது.

இந்த சம்பவத்தில் நீதிமன்றால் பிறப்பிக்கப்பட்ட பிடியாணைக்கு அமைய ரத்ன தேரர் மன்றில் சரணடைந்தார். இதனையடுத்தே அவரை விலக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

### சர்வதேச நீதியைக் கோரும்

## கையெழுத்துப் போராட்டத்திற்கு ஆதரவாக ஊர்திப் பவனி ஆரம்பம்

சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள போராட்டத்திற்கு ஆதரவாக ஊர்திப்பவனியொன்று தொடக்கி வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான நாளை சனிக்கிழமை வடக்கு கிழக்கு காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கிலும் கிழக்கிலும் மாபெரும் போராட்டம் முன்னெடுக்கபடவுள்ளது.

வடக்கில் யாழ்ப்பாணம் செம்மணியில் இப் போராட்டம் நடைபெறவுள்ளது. இப்போராட்டத்திற்கு ஆதரவைத் திரட்டும் வகையில் யாழிலிருந்து ஊர்திப் பவனி தொடங்கப்பட்டுள்ளது.

உலகத் தமிழாராச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தி அங்கிருந்து இந்த ஊர்திப் பவனி தொடங்கியது.

இவ்ஊர்திப் பவனியொன்று இன்று பல்வேறு இடங்களிற்கும் சென்று நாளை காலை போராட்டம் நடைபெறும் செம்மணியை வந்தடைந்து நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப் போராட்டத்திற்கு ஆதரவைத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் இந்தக் கையெழுத்துப் போராட்டத்திற்கு அனைவரும் அணிதிரள வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார்.


Semba Services (Pvt) Ltd
விமான நிலைய போக்குவரத்து மற்றும் சுற்றுலா ஏற்பாடுகள்
மேலதிக விபரங்களுக்கு
+94 77 3078 799
நாடுமுழுவதும்
• நட்சத்திர விடுதிகளில் தங்குமிட வசதி
• சுற்றுலா ஒழுங்கமைப்பு வசதிகள்
• போக்குவரத்து வசதிகள்
#551A, kasthuriyar Road, Jaffna.
#45A, Pennyquick Lane, Colombo 05


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர்
Kalaikkathir

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2025இல் வெளியிடப்பெற்றது